‘சார்ல்ஸ் வெஸ்டன் பாடசாலை, கூம்ப்ஸ்
‘பெற்றோர் மற்றும் பிரசைகள் சங்கம்’’

# கேள்விகளும் பதில்களும்

## ‘P&C’ என்பது என்ன?

பாடசாலை சமூகத்தினரது கருத்துக்களைச் சார்புபடுத்தும் பெற்றோர் குழு ஒன்று பெரும்பாலான பாடசாலைகளில் உள்ளது.

‘சார்ல்ஸ் வெஸ்டன்’இல் இந்தக் குழு ‘பெற்றோர் மற்றும் பிரசைகள் சங்கம்’ (P&C Association) என்று அழைக்கப்படுகிறது. பாடசாலை மற்றும் சமூகத்துடன் சம்பந்தப்பட்ட விடயங்களைப் பற்றிக் கலந்துரையாடுவதற்கான சந்திப்புகளை நாங்கள் நடத்துகிறோம்.

## P&C-யில் அங்கத்தவராக இருப்பது யார்?

‘சார்ல்ஸ் வெஸ்டன்’இல் படிக்கும் அனைத்துப் பிள்ளைகளுடைய பெற்றோர்களும் பராமரிப்பாளர்களும் தானாகவே ‘P&C’-யின் அங்கத்தவர்களாக இருப்பர்.

## ‘P&C’ குழு என்பது என்ன?

இந்தக் குழுவின் இயக்கத்தில் உதவும் தொண்டர்களாகப் பணியாற்றும் பெற்றோர் அல்லது பராமரிப்பாளர்கள் ‘P&C குழு’ வில் இருப்பார்கள். பெற்றோர்களும் பராமரிப்பாளர்களும் தம்மைத் தாமே முன்மொழிவர், மற்றும் ‘குழு’விலுள்ள பதவிகளுக்கு 12 மாத காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவர். இந்தக் ‘குழு’வில் உள்ள பதவிகள்:

| முக்கியமான பதவிகள் | விருப்பத்தெரிவிற்கு உட்பட்டவை |
|---|---|
| தலைவர் | பொதுக் குழு அங்கத்தவர்கள் |
| உப தலைவர் | தொடர்பாடல் அலுவலர் |
| செயலாளர் | குழுப் பிரதிநிதி |
| பொருளாளர் | நிதிதிரட்டு ஒருங்கிணைப்பாளர் |
| பொதுமக்கள் தொடர்பு அலுவலர் | |

## ‘P&C’ எப்போது சந்திக்கும்?

ஒவ்வொரு பாடசாலைப் பருவத்தின் 3ஆம் மற்றும் 8ஆம் வாரங்களில் செவ்வாய்க் கிழமையன்று நாங்கள் சந்திப்போம். பாடசாலையின் செய்திமடலிலும், P&C-யின் ‘முகநூல்’ பக்கத்திலும் சந்திப்புகள் விளம்பரப்படுத்தப்படும். எவ்வொரு பெற்றோரும் அல்லது பராமரிப்பாளரும் சந்திப்பில் கலந்துகொள்ளலாம்.

பாடசாலை நடவடிக்கைகள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றைப் பற்றியும், பாடசாலைக்கு நாம் எவ்விதமாகப் பங்களிப்பு செய்யலாம் என்பதைப் பற்றியும் இந்த சந்திப்புகளில் கலந்துரையாடி முடிவுகளை மேற்கொள்வோம்.

மாலை 7 மணிக்கு ‘சமூக அறை’யில் காணொலிக் கரத்தரங்கு மூலமாக சந்திப்புகள் நடைபெறும்.

‘முகநூ’லில் எம்மைக் காணுங்கள்: Facebook
@CWSCParents

## ‘P&C’-யின் பங்கு என்ன?

பெற்றோர்களையும், பராமரிப்பாளர்களயும் பாடசாலை சமூகத்தில் ஈடுபடுத்துவதன் மூலம் சமூகத்தினரது ஆதரவுதவியினை ‘P&C’-யானது பாடசாலைக்கு அளிக்கிறது. பாடசாலைக்கும், மாணவ-‘மாணவியருக்கும் ஆதரவுதவியாக இருப்பதற்கான நிகழ்ச்சிகளையும், நிதிதிரட்டு நடவடிக்கைகளையும் நாங்கள் மேற்கொள்கிறோம்.

பாடசாலையிலுள்ள ‘இரண்டாம்கை சீருடை இருப்பக’ (school clothing pool) த்தினை நடாத்துவது எமது பொறுப்பாகும்.

## பாடசாலை ‘சபை’யிலிருந்து ‘P&C’ எவ்வாறு மாறுபடுகிறது?

ACTயிலுள்ள ஒவ்வொரு பாடசாலையிலும் ‘பாடசாலை சபை’ (school board) ஒன்று இருக்கிறது. தமது பாடசாலைக்கான முடிவுகளை எடுப்பதில் பெற்றோர்கள், பராமரிப்பாளர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவ-மாணவியர் ஆகியோர் இந்த ‘சபை’யில் பங்கு கொள்ளலாம். உண்மையில் இந்த ‘சபை’ பாடசாலையின் கொள்கைஉருவாக்க அமைப்பாக செயல்படுகிறது.

பாடசாலை ‘சபை’யானது வருடம் ஒன்றிற்குக் குறைந்தபட்சமாக நான்கு முறைகள் சந்திக்கும், மற்றும் பதவிகளுக்கான நபர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ‘சபை’க்குத் தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தவர்கள் குறைந்தபட்சமாக 12 மாத காலத்திற்கும், 24 மாதங்களுக்கு அதிகமாக இல்லாமலும் பணியாற்றுவார்கள்.

‘P&C’-யானது பாடசாலை ‘சபை’யுடன் இணைவாகப் பணியாற்றும், மற்றும் விடயங்களைக் கருத்தில் கொள்வதற்காக அவற்றை ‘சபை’க்குப் பரிந்துரை செய்யும்.

## 'சீருடை இருப்பகம்' (clothing pool) என்பது என்ன?

'சீருடை இருப்பகம்' என்பது பயன்படுத்தப்பட்ட பாடசாலைச் சீருடைகளைக் குடும்பங்கள் வாங்குவதற்கான ஒரு வாய்ப்பாகும். பெற்றோர்களும், பராமரிப்பாளர்களும் பயன்படுத்தப்பட்ட சீருடைகளைக் குறைந்த விலைகளில் பார்த்து வாங்கப் பாடசாலைக்கு வருவதற்காக பயன்படுத்தப்பட்ட சீருடை விற்பனைகளை நாங்கள் தவறாமல் அவ்வப்போது செய்துவருகிறோம்.

நிதிநிலையின் காரணமாக பாடசாலைச் சீருடைகளை வாங்குவதில் சிரமம் உள்ள குடும்பங்களுக்கு 'P&C' தாராளமாக உதவும்.

## பயன்படுத்தப்பட்ட பாடசாலைச் சீருடைகளை நான் எப்போது வாங்கலாம்?

ஒவ்வொரு பாடசாலைப் பருவத்திலும் 'சீருடை இருப்பகம்' திறந்திருக்கும். பாடசாலை செய்திமடலிலும், 'P&C'-யின் முகநூல் பக்கத்திலும் பயன்படுத்தப்பட்ட சீருடை விற்பனைத் திகதியும், நேரமும் விளம்பரப்படுத்தப்படும்.

## 'சீருடை இருப்பக' த்திற்கு நான் நன்கொடை அளிக்க இயலுமா?

'சீருடை இருப்பக'த்திற்கு நல்ல, தரமான பயன்படுத்தப்பட்ட சீருடைகளைக் கொடையாக அளிக்குமாறு பெற்றோர்களையும், பராமரிப்பாளர்களையும் ஊக்குவிக்கிறோம். 'P&C'-யிற்கும், பாடசாலைக்குமான அத்தியாவசிய நிதியைத் திரட்ட நீங்கள் உதவுவீர்கள்.

'சீருடை இருப்பக'த்திற்கு நீங்கள் கொடையாய் அளிக்கும் உடுப்புகளை நீங்கள் பாடசாலை அலுவலகத்தில் விட்டுச்செல்லலாம்.

## 'P&C' ஆற்றும் மற்ற காரியங்கள் யாவை?

நிதி திரட்டுவதற்கான வாய்ப்புகளில் சமூகத்தினரை ஈடுபடுத்துவதற்கான புதிய வழிகளைப் பற்றிய யோசனைகளை நாங்கள் வரவேற்கிறோம். பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளை நாங்கள் நடத்திவருகிறோம், மற்றும் மாணவ-மாணவியருக்கும், குடும்பத்தினருக்கும் பல சேவைகளை வழங்கிவருகிறோம். எமது கடந்த கால நடவடிக்கைகளில் உள்ளடங்குவன:

- பாடசாலை நடனங்கள்
- புதிய பெற்றோர்களுக்கு வரவேற்பு அன்பளிப்புகள்
- ஆசிரியர்களுக்கான நன்றி அன்பளிப்புகள்
- 'வரவேற்பு ''பிக்னிக்' மற்றும் 'தேர்தல் BBQ'
- 'ட்ரிவியா நைட்'
- தாய் மற்றும் தந்தையர் நாள் காலையுணவு மற்றும் 'கிஃப்ட் ஸ்டால்'
- சமூக கிருஸ்துமஸ் பாடல் நிகழ்ச்சிகளில் 'குக்கீ அலங்காரம்' மற்றும் 'கிஃப்ட் ஸ்டால்'
- அயலவர் தினம்
- நிதி திரட்டல் நிகழ்ச்சிகள் குறித்து 'மாணவ-மாணவியர் மன்ற'(Student Parliament)த்துடன் இணைவாய்ப் பணியாற்றல்

## எந்த வழிகளில் நான் தொண்டாற்றலாம்?

நமது பாடசாலைக்கு உதவுவதற்குத் தொண்டாற்றுவதற்கான பல வழிகள் உள்ளன. சிலர் பின் வரும் சேவைகளைச் செய்ய முன்வருவர்:

- 'சீருடை இருப்பக'த்திற்காக சீருடைகளைத் துவைத்து, அவற்றை வகைப்படுத்துதல்
- நிதி திரட்டல் நிகழ்ச்சிகளுக்காக 'கேக்'குகள் செய்தல்
- சமூக 'பார்பெக்யூ'க்களில் சமைத்தல்
- நிகழ்ச்சிகளில் உணவு பறிமாறல்
- நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்

## 'P&C'-யில் எந்த வழிகளில் நான் ஈடுபாடு கொள்ளலாம்?

நீங்கள் ஈடுபாடு கொள்வதற்கான வழிகள் பலவுள்ளன:

- சந்திப்புகளுக்கு நீங்களும் வரலாம்
- எமது நிகழ்ச்சிகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் ஆதரவுதவியாக இருக்கலாம்
- நிதி திரட்டலைப் பற்றிய உங்களுடைய யோசனைகளை எம்முடன் பகிர்ந்துகொள்ளலாம்
- உதவியாக இருப்பதற்குத் தொண்டாற்ற முன்வரலாம்.

## 'P&C'-யுடன் நான் எப்படித் தொடர்பு கொள்வது?

உங்களுடைய யோசனைகளையும் பின்னூட்டல்களையும் கேட்க நாங்கள் ஆர்வமாயுள்ளோம். சந்திப்புகளில் கலந்துகொள்ளுமாறு உங்களை அழைக்கிறோம் – அனைவரது வரவையும் வேண்டுகிறோம்.

**charleswestonparents@gmail.com**-இற்கு-மின்னஞ்சல் அனுப்புவதன் மூலமாகவும் நீங்கள் P&C-யுடன் தொடர்புகொள்ளலாம்.

## எனக்கு ஒரு பிரச்சினை அல்லது கரிசனம் இருக்கிறது – யாருக்கு நான் இதைச் சொல்வது?

பிரச்சினை அல்லது கரிசனம் 'P&C'-யைப் பற்றியதாக இருந்தால், எங்களுக்கு நீங்கள் அதை மின்னஞ்சல் மூலமாகத் தெரிவிக்கலாம், அல்லது அதை பற்றி சந்திப்பு ஒன்றில் கேள்விகள் எழுப்பலாம்.

பாடசாலையின் கொள்கைத் திட்டங்கள் அல்லது யுக்திகளைப் பற்றிய விடயங்களுக்கு **charlesweston@ed.act.edu.au** எனும் மின்னஞ்சல் மூலம் நீங்கள் பாடசாலை 'சபை' அல்லது பாடசாலை அதிபருடன் தொடர்புகொள்ள வேண்டும்.

உங்களுடைய பிள்ளையைப் பற்றிய விடயங்களுக்காக, **firstname.lastname@ed.act.edu.au** எனும் வடிவுருவைப் பின்பற்றி அவருடைய ஆசிரியருடன் தொடர்புகொள்ளுங்கள்.

அனைத்து மின்னஞ்சல்களுக்கும் பதில் கிடைப்பதற்கு 48 மணி நேரம் வரைக்குமான அவகாசம் கொடுங்கள்.

**மற்ற குடும்பங்களைச் சந்திப்பதற்கும், 'சார்ல்ஸ் வெஸ்டன் பாடசாலை சமூக'த்தினருக்குள்ளாகத் தொடர்புறவுகளை ஏற்படுத்திக்கொள்ளவும் 'P&C' சிறந்ததொரு வழியாகும்.**

## அவசர நிலை விசாரணைகள்

அவசர நிலை எதற்கும், தயவு செய்து பாடசாலையினது அலுவலகத்தினை 02 6142 0404 இல் அழையுங்கள்.

ACT Government
Education